*கவனிக்க.-2024.02.22 ஆந் திகதிய 2373 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2374 - 2024 මාර්තු මස 01 වැනි සිකුරාදා - 2024.03.01

*2374 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 24 |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024,மாச்சு மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, மாச்சு மாதம் 07ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

23 - B 082545- 353 (2024/03)

## பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

### இல.6375/MB வழக்கில் பொருந்தும் சிலாபம் மாவட்ட நீதிமன்ற இல. 01/24 இ இன் கீழ் பிசுக்கால் மூலம் நடைபெறும்

#### பெறுமதிவாய்ந்த சொத்து பிரசித்த ஏல விற்பனை

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், சிலாபம் காணிப் பதிவுப் பிரிவுக்கு உட்பட்ட வடக்கு பிடிகல் கோரளை,ஆணைவிழுந்தான் பற்று, ஆரச்சிக்கட்டுவ பிரதேச செயலாளர் பிரிவு, ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபை எல்லைக்குள், ராஜகதழுவ எனக் குறிப்பிடப்பட்ட போதும் ஆரச்சிக்கட்டுவ மேற்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட ஆரச்சிக்கட்டுவ ராஜகதழுவ என்ற ஊரில் அமைந்துள்ள "என்டன்விலாவத்த" என்ற காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் வர்ணன் பெரேரா அவர்களினால் 1991.01.07 ஆந் திகதி அளவீடு செய்யப்பட்ட இலக்கம் 6551 என்ற நில அளவை படத்தில் 81 ஆம் இலக்க காணிக்கு எல்லைகளாவன-

வடக்கு: இலக்கம் 84 என்ற பகுதியும்;
கிழக்கு: இலக்கம் 82 என்ற பகுதியும்;
தெற்கு: இலக்கம் 80 என்ற பகுதியும்;
மேற்கு: இலக்கம் 181 என்ற பகுதியும் (பாதை).

ஆகிய எல்லைகளைக்கொண்டு அமைந்துள்ள ( 00ஏ.00றூ.20பே.) விசாலமுடைய அதனுள் அமையப்பெற்ற மரங்கள், பழங்கள், கட்டிடங்கள் எல்லாம் அமையப்பெற்றனவையாகும்.

மேற்கூறிய காணி கீழ்வருமாறு மீண்டும் அளவீடு செய்யப்பட்டுள்ளது.

ஆரச்சிக்கட்டுவ ராஜகதழுவ என்ற ஊரில் அமைந்துள்ள "என்டன்விலாவத்த" என்ற காணிக்கு M. K. மஞ்சு சிறீ பிரியங்கர அனுமதிபெற்ற நில அளவையாளர் மூலம் 2013.09.19 ஆந் திகதி அளவீடு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்டு இலக்கம் 2576 என்ற வரைபடத்தில் முதலாம் இலக்க காணிக்கு எல்லைகளாவன-

வடக்கு: அனுமதிபெற்ற வர்ணன் பெரேரா நில அளவையாளரின் இல. 6551 என்ற வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 84 ஆம் இலக்க காணியும்;
கிழக்கு: அனுமதிபெற்ற வர்ணன் பெரேரா நில அளவையாளரின் இல. 6551 என்ற வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 82 ஆம் இலக்க காணியும்;
தெற்கு: அனுமதிபெற்ற வர்ணன் பெரேரா நில அளவையாளரின் இல. 6551 என்ற வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 80 ஆம் இலக்க பிரிவும்;
மேற்கு: அனுமதிபெற்ற வர்ணன் பெரேரா நில அளவையாளரின் இல. 6551 என்ற வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 181 ஆம் இலக்க பிரதேச சபை பாதையும்.

ஆகிய எல்லைகளைக் கொண்ட (00ஏ.00றூ.20பே.) விசாலமுடையதும் அதனுள் அமையப்பெற்ற மரங்கள், பழங்கள், கட்டிடங்கள் எல்லாம் அமையப்பெற்றவையாகும்.

காணியின் அளவு (00ஏ.00றூ.20பே.) இது சிலாபம் காணிப்பதிவகத்தில் B 23/51 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**காணிக்கான பிரவேசம்**: சிலாபம் - புத்தளம் A3 பிரதான வீதியில் இருந்து 14.6 கி.மீ. அளவு தூரம் செல்லும் போது சந்திக்கும் ஆரச்சிக்கட்டுவ நகர புகையிரத வீதிப்பாதை ( ஆரச்சிக்கட்டுவ பெற்றோல் நிலைய இடது புறத்தில் உள்ள பாதை) 350 மீற்றர் தூரத்திற்கு செல்லும் போது சந்திக்கும் சனசமூக நிலைய Y சந்தியிலிருந்து இடது பக்கத்திற்கு திரும்பி 50 மீற்றர் அளவில் செல்லும் போது இடது பக்கமாக சந்திக்கும் (8ஆவது ) ஏல விற்பனைக்கான காணி அமைந்துள்ளது.

பதில் பிஸ்கால் மூலம் 2024, சித்திரை மாதம் 05 ஆந் திகதி முற்பகல் 11.00 மணிக்கு காணி அமையப்பெற்ற இடத்தில் பிரசித்த ஏல விற்பனை நடைபெறும்.

**பணம் செலுத்தும் முறை**: ஏல விற்பனை முடிவில் தீர்வு செய்யப்பட்டபின் உடனே வெற்றிகரமான கொள்வனவாளரினால் கீழ்வருமாறு பணமாகச் செலுத்தப்பட வேண்டும்:

1. கொள்வனவு விலையின் 25% (நூற்றுக்கு இருபத்தைந்து);

2. மாகாண அதிகாரிக்கு செலுத்த வேண்டிய 1% ( நூற்றுக்கு ஒன்று) விற்பனவு வரி;
3. பிஸ்கால் தரகுப்பணம் சிவில் சட்டக் கோவை 258 ஆம் பிரிவின்படி தரகுப் பணம் ;
4. சகலவிதமான பிரச்சார செலவு;
5. எழுதுவினைஞர் மற்றும் கூவுனர் கொடுப்பனவு ரூபா 500.00;
6.ஏல விற்பனவு மற்றும் ஏனைய செலவுகள் செய்யப்படின் அதற்கான கொடுப்பனவுகள்;
7. விற்பனவு உறுதிக்கான முத்திரைக் கட்டணம் என்பனவாகும்.

குறிப்பிட்ட சொத்து விற்பனை நீதிமன்ற அனுமதியின் பேரில் நடைபெறும்.

கொள்வனவு விலையின் 75% ( நூற்றுக்கு எழுபத்தைந்து) மிகுதி ஏல விற்பனவு நடைபெற்ற தினத்தில் இருந்து முப்பது நாட்களுக்குள் மேற்கூறிய வழக்கு இலக்கத்திற்கு வைப்பில் இட வேண்டும்.

மேற்கூறப்பட்ட 30 நாட்களினுள் மேல் சொல்லப்பட்ட முழுத் தொகையும் செலுத்தப்படாத விடத்து பணமாக செலுத்தப்பட்ட தொகை திரும்ப மீள் அளிக்கப்படாது என்றும் ஆதனம் மீண்டும் ஏல மிட நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பிட்ட காணிப்பத்திரம் மற்றும் ஆவணங்கள் பற்றிய பரிசீலனை , மேலதிக விபரங்கள் "பிரதேச முகாமையாளர், மக்கள் வங்கி, பிரதேச அலுவலகம், மக்கள் வங்கி கட்டிடம் ( முதலாம் மாடி), இல. 79, மாரவில வீதி, நாத்தாண்டி" என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி இல.: 032- 2253300, 032- 2253301. தொலைநகல் (Fax) இல. - 0322255247.

பதிவாளர்,
பதில் பிசுக்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
சிலாபம்.

பதிவாளர்,
மாவட்ட மாஜிஸ்ரேட் நீதிமன்றம்,
சிலாபம்.

03- 83

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு**.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்**.

**அட்டவணை - 2024**

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மாச்சு** | .. | வெள்ளி | 01.03.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.02.2024 |
| | | வியாழன் | 07.03.2024 | .. | நண்பகல் 12 | வியாழன் | 22.02.2024 |
| | | வெள்ளி | 15.03.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.03.2024 |
| | | வெள்ளி | 22.03.2024 | .. | நண்பகல் 12 | வியாழன் | 07.03.2024 |
| | | வியாழன் | 28.03.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.03.2024 |
| **ஏப்பிறல்** | .. | வெள்ளி | 05.04.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.03.2024 |
| | | புதன் | 10.04.2024 | .. | நண்பகல் 12 | வியாழன் | 28.03.2024 |
| | | வெள்ளி | 19.04.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.04.2024 |
| | | வெள்ளி | 26.04.2024 | .. | நண்பகல் 12 | புதன் | 10.04.2024 |
| **மே** | .. | வெள்ளி | 03.05.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.04.2024 |
| | | வெள்ளி | 10.05.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.04.2024 |
| | | வெள்ளி | 17.05.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.05.2024 |
| | | புதன் | 22.05.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.05.2024 |
| | | வெள்ளி | 31.05.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.05.2024 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.